கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த உத்தரவைப் பிறப்பித்து உடனடியாக பணி செய்ய ஆணையிட்டதற்காக எங்கள் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 174, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

174—

விவேகானந்தா உதவி துவக்கப்பள்ளிக்கு சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்

***25088*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மானந்தக்குடி அய்யன் பேட்டை ஊராட்சி, விவேகானந்தா உதவி துவக்கப்பள்ளிக்கு நிரந்தர சத்துணவுக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியார் பள்ளிக்கூடத்தில் சத்துணவுக் கூடம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்ய இயலாது. தனியார் யாராவது முன் வந்தால் அதைப் பற்றி ஆய்வு செய்யும்.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியம்-மானந்தக்குடி அய்யன்பேட்டை ஊராட்சியில் இருக்கின்ற உதவி துவக்கப்பள்ளி தனியார் பள்ளியாக இருந்தாலும்கூட முன்பு இதே ஊரில் அரசு உயர்நிலைப் பள்ளி அமைக்கப்பட்ட நேரத்தில், நடுநிலைப்பள்ளி நடத்திவந்த இந்தப் பள்ளியினுடைய நிர்வாகி அந்தப் பள்ளிக்குச் சொந்தமான கட்டிடம், இடம் போன்றவைகளை எல்லாம் உயர்நிலைப் பள்ளிக்கு விட்டுக் கொடுத்து நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறார். எனவே அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று பொன்விழா நடத்திக்கொண்டிருக்கின்ற அந்த உதவி பெறும் துவக்கப்பள்ளிக்கு சிறப்புத் திட்டத்தின் கீழ் ஒரு சத்துணவு கூடத்தைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 30]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இடம் கொடுத்தார், நல்ல காரியங்களைச் செய்தார் என்பதற்காகத்தான் அந்தப் பள்ளிக்கு—தனியார் பள்ளியாக இருந்தாலும் இலவசமாக சத்துணவை வழங்கி இன்றைக்கு பள்ளிப்பிள்ளைகள் பயனடையச் செய்திருக்கிறோம். ஏறத்தாழ 38,600 பள்ளிகள் இருக்கின்றன. அதிலே தனியார் பள்ளிகள் மட்டும் 7,726 இருக்கின்றன. நம்முடைய பள்ளிகளிலே பழுது பார்க்கின்ற பணி கட்டிட வேலைகளிலே, இன்னும் சிறப்பாக மேம்படுத்துகின்ற பணியெல்லாம் இருக்கின்ற காரணத்தினால் தனியார் பள்ளிக்கு அரசு இப்போதிருக்கின்ற நிதி நெருக்கடியில் உதவுவதற்கு இயலாது. சத்துணவை இலவசமாக வழங்குவதற்கு முடியும். ஆனால் இந்தக் கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு அரசினால் பரிசீலனை செய்ய இயலாது. தனியார் யாராவது நன்கொடையாளர் வந்தால் அவருக்கு முன்னுரிமை கொடுத்து அந்தப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறோம்.

திரு.எஸ்.ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவேகானந்தா உதவி துவக்கப்பள்ளி இன்றைக்கு கூரை கட்டிடத்திலே நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தப் பள்ளியிலே படிக்கின்ற பிள்ளைகள் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திலே பங்கு கொள்கின்ற அந்தக் குழந்தைகளுக்கு நல்லது செய்கின்ற வகையில் அந்தப் பள்ளியினுடைய நிர்வாகி கட்டடத்தில் பாதிச் செலவை ஒத்துக் கொண்டு வந்தால் மீதி பாதியை அரசு ஏற்று செய்ய ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கட்டிடங்களே நிரம்ப பழுதுபட்டு அந்தப் பணிகளை எடுத்துக்கொண்டு, ஒரு கோடி ரூபாய் செலவில் ஆண்டுதோறும் செய்து வருகிறோம். இந்த அரசு பழுது பார்க்கின்ற பணி முழுமையாக முடிகின்ற வரையிலே தனியார் பள்ளிகளுக்கு இத்தகைய நிதி ஒதுக்கீடு செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 175, திரு. தா. செழியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

175—

ப. களத்தூர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

***38555**—திரு. தா. செழியன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—